[2011 ஆகஸ்ட் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

21—

தடுப்பணை

***848—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பேரங்கியூர் கிராமத்தில் தடுப்பணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தெருக்கோடியிலே இருக்கின்ற ஏழையை குபேரனாக்குகின்ற வல்லமை தேவி அலைமகளுக்கு உண்டு; பிறவியிலேயே ஊமையாக உள்ள ஒருவனை கவிஞனாக்குகின்ற வல்லமை தேவி கலைமகளுக்கு உண்டு; கோழையாகப் பிறந்த ஒருவனை வீரனாக்குகின்ற வல்லமை தேவி மலைமகளுக்கு உண்டு. அலைமகள், கலைமகள், மலைமகள் ஆகிய முப்பெரும் தேவியரின் பரிணாம காட்சியாக விளங்கிக் கொண்டிருக்கின்றவரும், தமிழ், தமிழ் என்று தன்னையும், தன் குடும்பத்தாரையும் வளர்த்துக் கொண்டிருக்கின்ற மைனாரிட்டி தலைவர்கள் மத்தியிலே தமிழக மக்களுக்காக வாழ்ந்து, தமிழர்களுக்காக குரல் கொடுத்துகொண்டு, அதனை செயல்படுத்திக் காட்டிக்கொண்டிருக்கின்ற உன்னதத் தலைவி, அறிவின் உச்சம், அச்சமின்மை, அன்பின் உச்சம், தன்னம்பிக்கை என்பதற்குச் சான்றாக விளங்கிக் கொண்டிருக்கின்றவரும், வல்லரசே நேரில் வந்து பாராட்டும் நல்லரசை நடத்திக்கொண்டிருக்கின்ற கழகத்தினுடைய வாழ்நாள் பொதுச் செயலாளர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர், எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைச் சமர்ப்பித்து, எனது விடையினை இந்த மன்றத்தில் கூற விழைகிறேன்.

2011 ஆகஸ்ட் 10]

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதியிலே, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பேரங்கியூர் கிராமத்தில் தடுப்பணை அமைக்க ரூ.1,094.26 இலட்சத்திற்கு 2010—2011 ஆம் ஆண்டின் விலை விகிதப்படி மதிப்பீடு தயாரிக்கும் பணி தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், பொதுப் பணித் துறை அவர்களின் பரிசீலனையில் உள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள எங்களின் குல விளக்கே, எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழே! என் தமிழுக்கு எட்டாவது உலகத் தமிழ் மாநாடு கண்ட எங்கள் தமிழ் அன்னையே! சுட்டெரிப்பது கதிர் என்றாலும், அதை வெட்டி எறிந்த வீரத் தாயே! குடும்பத்தைக் கொழுக்க வைத்த கொள்ளைக் கூட்டத்திற்குப் புத்தி புகட்டிய புரட்சித் தலைவியே! வானம் போற்றும், வானுறை தேவர் போற்றும், வையகம் போற்றும் தமிழக மக்களின் உள்ளம் போற்றும் நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்த எங்கள் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த என்னை இரண்டு முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வைத்து, வெற்றிபெறச் செய்து, இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதல்வர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே, எனது தொகுதி மக்களின் பிரச்சினை சம்மந்தமாக நான் கோரிய வினா ஒன்றிற்குக்கூட அவர்கள் பதில் அளிக்கவில்லை. ஆனால், தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் 14—வது பேரவையில் முதல் கூட்டத் தொடரிலேயே உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட பேரங்கியூர் கிராமத்தின் அருகில் உள்ள தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க கோரிய

வினாவிற்கு எனது தொகுதி மக்களின் நலனைக் கருதியும், ஏழை எளிய விவசாயிகளின் நலனைக் கருதியும், நிலத்தடி நீரை உயர்த்தும் நோக்கில் தடுப்பணை அமைக்க ரூ.1,094.26 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிற மகிழ்ச்சியான செய்தியை வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு, உளுந்தூர்பேட்டை தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் கோடானுகோடி நன்றியைப் பொற்பாதங்களில் காணிக்கையாக்கி அமர்கிறேன் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

22—

சுற்றுலா நகரம்

***154—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரத்தைச் சுற்றுலா நகரமாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி, தங்கத் தாரகை, மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்று தமிழக மக்களின் காவல் தெய்வமாக விளங்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதக் கமலங்களில் என்னுடைய கோடானுகோடி நன்றியினைச் சமர்ப்பித்து, தென் மாவட்டமான சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த சாதாரண தொண்டனாக இருந்த என்னை, அண்ணாநகர் தொகுதியின் வேட்பாளராக்கி, வெற்றிப்பெறச் செய்து, அமைச்சராக்கி, இங்கே பதில் அளிக்கக்கூடிய